to defend the Government. Like the traditional skylark of the Wordsworth's time he can sing and jolly well walk. In the interest of the proper proceedings of the House will the question list be so framed as to provide that the questions relating to the Chief Minister are included at the end and not in the beginning? This is the point worthy to be considered by the Chair.

THE HON. THIRU C. N. ANNADURAI : My question being taken up at the end is not done with any intention. He has himself said how my life has been arranged and he has given me a suggestion that I should be very punctual. I am thankful to him for the suggestion. But human weakness being what it is, particularly my own weakness, I may fail in this. He will be pleased to put up with me. I will keep that suggestion in mind and try to be punctual. Since he has given me one suggestion, I have got a right to give him another suggestion. He has suggested that punctuality is the one good trait that the Britisher has left to us. The Britisher has left another good trait to come to the point and not to be verbose.

Government employees not permitted to marry

* 359 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state the categories of Government employees Gazetted and Non-Gazetted who are not permitted to marry?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஒருவருமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கூட கெஸட்டட் ஆபீசர்கள்தான் என்று நினைக்கிறேன். இப்போது அவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லையா என்பதுதான் கேள்வி. அப்படியில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஐ.ஏ.எஸ். படித்த பெண்கள் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? அப்படியென்றால் அதற்கான காரணங்கள் என்ன? அப்படி செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நான் அளித்த பதிலில் ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரிகளும் உட்படுகிறார்கள். அவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதி மறுக்கப்படுவதில்லை. அப்படி யாருக்காவது அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் அங்கத்தினர் அவர்களிடம் இருந்தால் அவர்கள் அதைக் கொடுக்கலாம். அவருடைய நினைவிற்காக, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிற ஆரணங்குகள் திருமணம் செய்து கொண்டு தாய்மார்களாக இன்றையதினம் இருப்பதைக் கூட நான் அவர்களுக்கு சான்றுகளுடன் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*